Publication : Madurai Mani

Date : Nov 14, 2011

# நாளைய பள்ளிகள் கருத்தரங்கம் சென்னையில் ஐடிஸ்கவரி நடத்தியது

சென்னை, நவ.14-

நாளை பள்ளிகள் 2011 என்ற கருத்தரங்கை ஐடிஸ்கவரி என்ற நிறுவனம் சென்னையில் 3வது ஆண்டாக நடைபெற்றது. சிறந்த கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் கல்வித்தரத்தை மேம்படுத்த வேண்டியதன் தேவை குறித்து இதில் பேசிய கல்வியாளர்கள் வலியுறுத்தினர். எல்லைகளை கடந்த கல்வி என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் சென்னை, மும்பை, ஐதராபாத் ஆகிய நகரங்களைச் சேர்ந்த 1500 பள்ளிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒரு விஷயத்தை ஆழமாக புரிந்து விளக்கி கூறும் திறனும் சிறந்த தகவல் தொடர்புத்திறனும் முழுமையான தன்னம்பிக்கையும் கொண்ட மாணவர்கள்தான் தரமான மாணவர்களை இந்த சமுதாயம் எதிர்பார்க்கிறது என்றும் அவர்கள் கூறினர். அத்தகைய மாணவர்களை உருவாக்க தற்போதைய கல்வி முறையில் பல மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்றும் ஐடிஸ்கவரியின் நிர்வாக இயக்குனர் ஆஷிஷ்ராஜ்பால் கூறினார். மாணவர்கள் கேள்வி கேட்டு கருத்தை அறிதல் போன்றவற்றை வலியுறுத்தும் உயர்ந்த கற்றுக்கொள்ளும் முறை இன்றைய தேவை என்றும் அவர் தெரிவித்தார். இந்த கருத்தரங்கில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பேராசிரியர் அலிசன் கோப்னிக், ஐஐடி இயக்குனர் பாஸ்கர் ராமமூர்த்தி, பாட திட்ட நிபுணர் டாக்டர் கீதா ஐயர் உள்பட பலரும் பேசினர்.